2015 ஆகஸ்ட் 31]

169—

கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம்

***29547—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதியில் ஓமலூர், சங்கரி, கொங்கணாபுரம் ஆகிய பகுதிகளில் கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டுமென்று நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, ஓமலூர், சங்கரி மற்றும் கொங்கணாபுரம் ஆகிய பகுதிகளில் கைத்தறி பயிற்சி மையம் அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் பரமக்குடி ஆகிய பகுதிகளில் கைத்தறி பயிற்சி மையங்கள் அமைத்து நெசவாளர்களுக்குப் போதிய பயிற்சி அளித்து வருகின்றது. அதேபோன்று, சேலம் பொன்னம்மாபேட்டையில் இந்திய அரசின் நெசவாளர் சேவை மையத்தின்மூலம், சாயமிடுதல், பாவு ஓட்டுதல், நூல் சுற்றுதல், வடிவமைப்பு மற்றும் நெசவுப் பயிற்சிகளும் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் சேலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சங்கரி, ஓமலூர் மற்றும் கொங்கணாபுரம் பகுதிகளைச் சார்ந்த பெரும்பாலான நெசவாளர்கள் பயன்பெற்று வருகின்றனர். எனவே, சங்கரி தொகுதி, ஓமலூர், சங்கரி, கொங்கணாபுரம் பகுதிகளில் தனியாக ஒரு கைத்தறி பயிற்சி மையம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், நெசவாளர்கள் அதிகம் வசிக்கும் ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், வாழப்பட்டு,

பள்ளியாடி, வள்ளியூர் மற்றும் சங்கரி பகுதிகளில் உள்ள நெசவாளர்களுக்குப் பரவலாக்கப்பட்ட பயிற்சிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நலனுக்காக விதி 110–ன்கீழ், 'அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்', 'அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம்', 'அம்மா ஆரோக்கியத் திட்டம்', 'அம்மா மகப்பேறு சஞ்சீவித் திட்டம்' உள்ளிட்ட எண்ணற்ற மகத்தான திட்டங்களை வாரி வழங்கிய அன்புத் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா மகப்பேறு சஞ்சீவித் திட்டத்தில், தாயும், சேயும் சிரஞ்சீவியாக வாழ வழிவகுத்த கருணைத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோல் இன்னும் பல திட்டங்களால் தமிழக மக்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரி தொகுதிக்குட்பட்ட மகுடஞ்சாவடி, தாரமங்கலம் ஒன்றியங்களில் ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் தொழில்புரிந்து வருகின்றனர். இவர்கள் பயன்பெறும் வகையில் கைத்தறி குழுமத்துடன்கூடிய பொது வசதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் நிதியுதவியோடு 41 சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகுடஞ்சாவடி, தாரமங்கலம் ஒன்றியங்களில் பொது சேவை மையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். இந்த ஆண்டு பொது சேவை மையங்கள் அமைக்கக் கூடிய நிலையில், அந்தப் பகுதிகளும் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு

2015 ஆகஸ்ட் 31]

அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–25

திருச்செங்கோடு கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் சரகத்திலுள்ள சங்கரி பகுதியில் 9 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 829 உறுப்பினர்கள் நெசவு செய்து வருகின்றார்கள். இவர்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தொகுதிக்குட்பட்ட பகுதியில் 85 நெசவாளர்களுக்கு ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அடிப்படை நெசவுப் பயிற்சி, புதிய வடிவமைப்புப் பயிற்சி, விலை மதிப்புமிக்க இரகங்கள் உற்பத்தி செய்தல் பயிற்சி ஆகியவை கடந்த ஆண்டு அளிக்கப்பட்டுள்ளன என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் ஏராளமான விசைத்தறி தொழிலாளர்கள் உள்ளார்கள். இங்கு ஒரே ஒரு விசைத்தறி தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் மட்டுமே உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதலாக விசைத்தறித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அதன்மூலம் விசைத்தறி தொழிலாளர்கள் பயனடைய ஆவன செய்வார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறியாக இருந்தாலும், கைத்தறியாக இருந்தாலும், சங்கங்கள் அமைப்பதற்கு என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்தப் பகுதியிலே உள்ள விசைத்தறி நெசவாளர்கள், சரக உதவி இயக்குநர் அவர்களிடம் குறிப்பிட்ட உறுப்பினர்களோடு சங்கம் அமைக்க வேண்டுமென்று மனு செய்வார்களேயானால், அதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*